வைத்திய சந்திரிகா
Aug 1958

JL
L BM 211 N39
N58·20·8
188869

# வைத்திய சந்திரிகா

43

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டல மாதப் பத்ரிகை

விளம்பி
ஆடி - ஆவணி

AUGUST
1958

543
3-59



AUG 1958
MADRAS

தாருத் 20
பகுதி 8

Vol. 20
No. 8

ஆசிரியர் :
பண்டித ஸ்ரீ. மெ. ஸௌந்தரராஜாசார்ய, ஸ்ரீரங்கம்.

உப ஆசிரியர் & பிரசுரகர்த்தா :
S. V. ராதாகிருஷ்ண சாஸ்திரி,
வைத்யவிசாரத, ஆயுர்வேத சிரோமணி, திருச்சி.

பொருளடக்கம்

| | |
|---|---|
| சுகாதாரப்ரச்னை | 3 |
| இணைப்பு வைத்திய முறை | 7 |
| …யகல்பம் - இரஸாயன முறை | 9 |
| …ளித்த யோகங்கள் | 11 |
| … வைத்திய ஆராய்ச்சிக் கழகம் | 13 |
| …சிகித்ஸா | 14 |
| …கரத்னகரம் — (தனி) | 125—132 |

✻

Annual
Subscription
Rs. 5/-

✻

SL
N58' 208
188869

27, சின்னக்கடைத் தெரு, தெப்பக்குளம், திருச்சி.

# நீலிபிருங்காதி தைலம்

எண்ணெய் ஸ்நானத்திற்கும் எல்லா காலநிலைகளிலும் ஆரோக்கியமான கூந்தல் வளத்திற்கும் மெருகுக்கும் அனைவராலும் பாராட்டப்பட்டது.

தயாரிப்பாளர்கள் :

## ஆர்ய வைத்தியசாலா

(ஸ்தாபிதம் : 1902)

**கோட்டக்கல். (கோழிக்கோடு ஜில்லா)**

கிளைகள் : கோழிக்கோடு (போன் 155) திரூர் (போன் 31), பாலக்காடு (போன் 104), ஈரோடு, மற்றும் எர்ணாகுளம். விற்பனை டிப்போ : பாலக்காடு (வெட்டிகுளம் ரோட்).

600-க்கு மேற்பட்ட தரமான ஆயுர்வேத மருந்துகள் விஞ்ஞான ரீதியில் தயாரிக்கப்படுகின்றன. எமது தலைமை ஆபீஸிலும், கிளைகளிலும் சிறந்த ஆயுர்வேத சிகிச்சைகள் அளிக்கப்படுகின்றன. நவரக்கிழி, தாரா, பிழிச்சல் முதலான விசேஷ கேரள முறைகளும் கோட்டக்கல்லில் எங்கள் **கோல்டன் ஜுபிலி நர்ஸிங் ஹோமில்** மிதமான கட்டணங்களில் அளிக்கப்படுகின்றன. நேரில் ஆலோசித்தோ அல்லது தபால் மூலமோ, எமது பிரதான வைத்தியர் சிகித்சையும், மருந்தும் அளிப்பார்.

மேல் விவரங்களுக்கு தயவு செய்து

மானேஜிங் டிரஸ்டிக்கு எழுதவும்.



# A WORD OF ADVICE

If You are ever in need of Pure Musk, Saffron, Shilajit, Hing, Pearls & Himalayan Drugs etc., etc.,

Never make Experiments with Un-Known and Un-Reliable Firms

*Have your requirments from :—*

**KALIA BROTHERS (Regd.)**

5C/9, ROHTAK ROAD, NEW DELHI—5.

OR

**KALIA BROTHERS (Regd.)**

JULLUNDUR CITY—N. INDIA.

* * *

## ஓர் ஆலோசனை

எப்போதும் சுத்தமான கஸ்தூரி, குங்குமப்பூ, சிலாஜித், பெருங்காயம், முத்து, ஹிமாலய மூலிகைகள் முதலியன உங்களுக்குத் தேவையானால்—

முன் பின்னறியாததும் நம்பிக்கையில்லாததுமான ஸ்தாபனங்களோடு ஒருபோதும் பரீக்ஷை செய்ய வேண்டாம்.

உங்கள் தேவைகளைப் பெறுவதற்குத் தக்க இடம் :

**கலியா பிரதர்ஸ் (ரிஜிஸ்டர்ட்)**

5 C/9, ரோஹ்தாக் ரோடு, புது டில்லி—5.

அல்லது

**கலியா பிரதர்ஸ் (ரிஜிஸ்டர்ட்)**

ஜலந்தர் ஸிடி—(வட இந்தியா)

# இணைப்பு வைத்ய முறை போர்டு

### சர்க்கார் நியமித்துள்ளது

சென்னை, ஜூலை 23—“ இணைப்பு வைத்ய முறை போர்டு” ஒன்றை சென்னை சர்க்கார் அமைத்துள்ளனர். ஆயுர்வேதம், யூனானி, சித்த வைத்ய பிரதிநிதிகளுக்கும் இப்போர்டில் இடமளிக்கப்பட்டுள்ளது. சென்னை இணைப்பு வைத்யக் கல்லூரி பிரின்ஸிபால் இப்போர்டின் தலைவராக இருப்பார். தலைவர், மெம்பர்களின் பதவிகாலம் ஓராண்டாகும்.

மெம்பர்கள் :— ஆயுர்வேதம் : ஸ்ரீ என். எஸ். பாலகிருஷ்ணன், ஸ்ரீமதி சுசீலா சுப்பராயலு, ஸ்ரீ சி. புருஷோத்தமன், ஸ்ரீ சங்கரன், சித்த வைத்யம் :-ஸ்ரீமான்கள் இ. பு. நடேசன், ஜே. ஆர். கிருஷ்ணமூர்த்தி, டி. தங்கவேலு. வி. தினகரன், கே. ராமானுஜம், ஆர். எஸ். ஸ்ரீனிவாசன். என். சிவசுப்ரமணியம், யுனானி :—ஸ்ரீ பி. கமாலுத்தீன், ஸ்ரீ ஜாகிர் அலி ஜட்டி. (யூனானி முறைக்கு மற்றும் ஒரு மெம்பர் பின்னர் நியமிக்கப்படுவார்.)

## மஹாமண்டல வெளியீடுகள்.

| | | |
|---|---|---|
| 1. | திரட்டு வாகடம் | 0—6—0 |
| 2. | சித்தர் மூறை | 0—12—0 |
| 3. | சிகித்ஸா கலிகா | 0—14—0 |

தபால் செலவு தனி. வி. பி. இடையாது. முன்பணமும் அனுப்பவும்.

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலம்,
27, சின்னக்கடைத் தெரு, திருச்சி.

**ஸ்ரீரங்கம் லக்ஷ்மி ப்ரஸந்ந ஸ்ரீ வெங்கடேச ஆயுர்வேத தர்ம வைத்யசாலை, ஸ்ரீரங்கம்.**

ஜூலை மாதத்தில் சிகிச்சை பெற்றவர்களின் எண்ணிக்கை.

[illegible] 679
[illegible] 806 } 2032
[illegible] 547

நிர்வாஹஸ்தர்,
M. V. கிருஷ்ணமூர்த்தி ராவ்,
B. A., B. L., அட்வேகேட்.,
ராயபாளையம் எஸ்டேட்.

183869



ஸ்ரீ தந்வந்தரயே நம:

# வைத்ய சந்த்ரிகை.

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலத்தின் மாதப் பத்திரிகை.

| | | |
|---|---|---|
| தொகுதி 20 | விளம்பி – ஆடி – ஆவணி | பகுதி 8 |
| Vol. 20 | AUGUST 1958 | No. 8 |


आयुरागमरहस्यबोधिनी दीर्घजीवितविशेषदायिनी ।
द्राविडीयपृथुमण्डलादियं शश्वदुद्भवति वैद्यचन्द्रिका ॥

## சுகாதாரப்ரச்னை

பொது சுகாதாரம், தனிப்பட்ட மனிதனின் சுகாதாரம் இவ்விரண்டிற்காகக் கையாளப்படும் வழிகளில் தற்சமயம் சில புதிய ப்ரச்னைகள் எழுந்திருக்கின்றன. இப்பிரச்னைகள் நமது வழிகளிலுள்ள அடிப்படைத்தவறை நன்கு வெளிக்காட்டுகின்றன. இயற்கை வலுவிலே அளிக்கும் இந்தப் பாடத்தை ஆழ்ந்து கவனிப்பது மிக அவசியம்.

பொது சுகாதாரத்திற்கு யார் பொறுப்பு, தனிப்பட்டவனின் சுகாதாரத்திற்கு யார் பொறுப்பு? பொது சுகாதாரத்திற்கேற்ப தனிப்பட்டவனின் சுகாதாரத்தை அமைப்பதா? தனிப்பட்டவனின் சுகாதாரத்திற் கேற்ப பொது சுகாதாரத்தை அமைப்பதா? இரண்டிற்கும் பரஸ்பரம் முரண்பாடு ஏற்படுவது ஸாத்யமா? முரண் ஏற்படின் எதைப் பிரதானமாகக் கருதுவது? என்பதே இன்றைய புதிய பிரச்னை.

இப்பிரச்னையை ஆராயும் வகையில் தற்சமயம் தமிழ் நாட்டில் கும்பகோணத்தில் கொசு உபத்ரவத்தைப் போக்கும் எண்ணத்

துடன் கையாண்ட சுகாதார முறைகளையும் அதனால் தனி சுகாதாரத்திலும் பொது சுகாதாரத்திலும் ஏற்பட்டுள்ள வருந்தத் தக்க நிலையையும் சற்று ஆராய்வோம்; உண்மை விளங்கும்.

கொசு ஈ மூட்டைப்பூச்சி இவை இன்று நேற்று ஏற்பட்ட புதியதொரு விளைவு அல்ல. கும்பகோணம் போன்ற நீர்ப்பாங்கான இடங்களில் இவைகளின் உற்பத்தி கட்டுக்கடங்குவதில்லை. அதனால் ஏற்படும் முறைஜ்வரம் யானைக்கால் கிரந்தி போன்ற நோய்களின் உபத்ரவங்களும் அனந்தம். இந்நிலையைத் தவிர்க்க இதுவரை பல்வேறு உபாயங்கள் கையாளப்பட்டன. சமீபத்தில் சுகாதார இலாகா கையாண்ட உபாயத்தால் ஈக்களும் கொசுக்களும் ஒருவாறு ஒழிந்தன என்று பொது ஜனங்கள் பெருமூச்சு விடும்போது, வேறு புதிய வழியில் இவைகளின் தொந்தரவு அதிகமாகியது. ஈக்களையும் கொசுக்களையும் அழிக்கும் மருந்து தன் சக்தி இழந்ததையும் அம்மருந்துகளை தாங்கிக் கொண்டு வளர்ச்சி பெறும் சக்தியை ஈக்களும் கொசுக்களும் அடைந்ததையும் கண்டோம். பொதுவாக ஈக்களும் கொசுக்களும் இயற்கையளித்த மீறாமல் அவைகளின் பெருக்கைக் குறைந்து வந்த இயற்கை எதிரிகளான பல்லி முதலியவை சுகாதார முறை மருந்துகளால் அழிந்து ஈ கொசு இனப்பெருக்கம் தடையுறாது நடைபெற்று ஈக்களையும் கொசுக்களையும் கண்டு எல்லை தாண்டி ஓடும் பயங்கர நிலை ஏற்பட்டுள்ளது. டைபாய்டு, பிரவாஹிகை, குளிர்ஜ்வரம், யானைக்கால் இவைகளின் கடுமையும் சகிக்கமுடியாததாகி விட்டது.

இந்நிலைதான் இன்றைய பயங்கர சூழ்நிலை. ஈக்களும் கொசுக்களும் மனித இனத்திற்கு எதிரி என்று கருதும் நிலை மிக பயங்கரமானது. சுகாதார இலாகா கையாண்ட முறைகளையோ அதன் விளைவுகளையோ பற்றி இன்று வைத்ய இலாகாவிற்கும் சுகாதார இலாகாவிற்கும் மாறுபட்ட கருத்து ஏற்படும் நிலை உண்டாகி விட்டது. நகரத்து டாக்டர்கள் அனைவரும் சுகாதார இலாகா கையாண்ட முறையின் விளைவாகவே இந்த நிலையைக் கருதுகின்றனர். சுகாதார இலாகா இதை மறுக்க வழிகாண முயலுகின்றது. பெனிஸிலின் டிடிடி போன்றவைகளால் அழிக்கப்படும் ஜீவாணுக்களும் கிருமிகளும் பிற்பாடு அவைகளையே உணவாகக்



கொண்டு வளர்கின்றன என்ற விஞ்ஞானிகள் கண்ட ஓர் உண்மையையும் இங்கு நாம் மனதிற் கொள்ள வேண்டும்.

இயற்கை, மனித குலத்தை மாத்திரம் உலகில் தோற்றுவிக்கவில்லை. ஒவ்வொரு ஜீவஜந்துவும் உலகின் வாழ்வில் தனிப்பட்ட காரியத்திற்காகவே இயங்குகின்றன. இவைகளில் ஒன்று மற்றொன்றைத் தாக்கியே வாழ்வதும் இயற்கையளித்த சக்தியே.

ஈக்களும் கொசுக்களும் நமக்குக் கொடுக்கும் தொந்தரவு சகிக்க முடியாதது தான். அவைகளிலிருந்தும் நம்மைப் பாதுகாப்பது அவசியம் தான். அதற்காக அந்த இனத்தையே அழிக்க முற்படுவது முறையற்றது. நமது சூழ்நிலையை அவை பாழ்படுத்தாதிருக்க வகை காணுவதன் மூலம் நல்ல தற்காப்பைப் பெறுவது தான் சரியான முறை. இங்கு தான் பொது சுகாதாரத்திற்கும் தனி சுகாதாரத்திற்கும் உள்ள பேதத்தை நாம் நான்கு புரிந்து கொள்ள முடியும்.

கொசுவின் உற்பத்திஸ்தலமான சாக்கடைகளிலும் நீர்த்தேக்கங்களிலும் அவை உற்பத்தியாகாமலும் தங்காமலுமிருக்க சில விஷ மருந்துகளைத் தெளிப்பதன் மூலம் கொசுவை வெளியிலிருந்து வீட்டிற்குள்ளே விரட்டி அங்கு உற்பத்தியாகவும் வளரவும் அனுமதிக்கிறோம். இது ஈ கொசுத்தாக்குதலின் முதல் முனையில் ஏற்படும் விளைவு. சாக்கடையில் தங்க வசதி பெறாத கொசு அதற்கு இயற்கையான உயிர்ப்பற்று காரணமாக வீட்டிலுள்ள சூழ்நிலைக்கேற்ப தனது வாழ்க்கை முறையை மாற்றி அமைத்துக் கொள்கிறது. அப்போது தான் மனித இனத்திற்கு அது நேரிடை எதிரியாக மாறுகிறது, மனிதன், இவ்வெதிரியை வீட்டினுள்ளும் எதிர்க்க உணவு படுக்குமிடம் குழந்தைகள் விளையாடுமிடம், தான் குடிக்கும் ஜலம் என்று கூட சிந்தியாமல் எல்லாவற்றிலும் கொசு ஈக்களைக் கொல்லும் விஷபதார்த்தத்தைத் தெளித்து நேரிடையாகத் தாக்குகிறான், விஷபதார்த்தங்களே தனக்கு எதிரியாகும் ஒரு விபரீத விளைவையும் கண்டு கலங்குகிறான். முடிவில் இது இரண்டாவது முனையில் ஏற்படும் விளைவு.

இந்த விபரீத கதியின் காரணம் யாது? சற்று சிந்திக்க வேண்டியது மிக அவசியம். நாட்டின் பொருளாதார நிலையில்

போல சில அம்சங்களை தனியார்துறை எனக் கொண்டும் ஏற்படுத்திக் கொண்ட பாகுபாட்டின் விளைவு இது. பொது சுகாதாரத்தை சர்க்காரும், தனிசுகாதாரத்தை மக்களும் பிரித்துக்கொண்டுள்ளனர். தனிசுகாதாரத்தைக் கவனித்துப் பார்க்க வசதியோ, அவசிய உணர்வோ, அதைப் பற்றிய பிரசாரமோ ஒன்றுமில்லாதிருப்பதால் சர்க்கார் துறையான பொது சுகாதாரத்திற்காகச் செய்யப்படும் முறைகள் அனைத்தும் கெடுதலையே விளைவிக்கின்றன. பொது சுகாதாரவிதிகளை அமுலாக்கும் போது ஏற்படும் நிர்பந்தத்தில் சில இடங்களில் மக்கள் தனிப்பட்ட சுகாதார வாழ்வையும் கெடுத்துக் கொள்கின்றனர். இதை மாற்றியமைப்பதே இன்றைய சுகாதார பிரச்னைக்குத் தகுந்த வழியாகும்.

இந்தியப் பண்பாடு இங்கு ஒரு நல்ல வழியைக் காட்டுகின்றது. அகத்தூய்மை புறத்தூய்மை வெளிப்புறத்தூய்மை என்று மூன்று வகையாக சுகாதார ஹேதுவான தூய்மையைப் பிரிக்கலாம், அதில் அகத்தூய்மை முதலிலும் புறத்தூய்மை பின்னும் வெளிப்புறத் தூய்மை மூன்றாவதாகவும் எடுத்துக் கொள்ளப்படும். இவ்வரிசையையே சுகாதாரத்திலும் கையாண்டால் நாடு சீரடையும்.

முதலில் தனிமனிதன் தனது தனிப்பட்ட சுகாதாரத்தைப் பாதுகாப்பது, தனக்கெனத் தனியாக வகுத்துக் கொண்டுள்ள வீட்டுச் சூழ்நிலையை தூய்மையாகப் பாதுகாத்துக்கொள்வது, பிறகு தான் வாழும் சமூகத்தின் சூழ்நிலையை சுத்தமாக்குவது என்ற அடிப்படையில் நாட்டின் சுகாதாரம் அமைக்கப்பட வேண்டும். அப்போது தான் தனி சுகாதாரத்திற்கும் பொது சுகாதாரத்திற்கும் நடுவே ஏற்படும் முரண்பாடுகள் விலகும். தனிப்பட்ட சுகாதாரத்தை அனுஸரித்து பொது சுகாதாரம் வகுக்கப்படவேண்டுமே தவிர பொது சுகாதாரத்திற்கேற்ப தனி சுகாதாரத்தை வகுப்பது அர்த்தமற்றது. பொது சுகாதாரத்திற்கும் தனி சுகாதாரத்திற்கும் வேற்றுமை உண்டு என நாம் கருதவில்லை, ஆனால் எதை முதலில் கவனிக்க வேண்டும், எங்கிருந்து இதை ஆரம்பிக்க வேண்டும் என்ற இரு வழிகளில் தான் கருத்து வேறுபாடு ஏற்படுகின்றது. சுகாதாரத்தில் தனியார் துறை பொதுத்துறை என்ற பாகுபாடின்றி தனி சுகாதாரத்தில் முதலில் கவனம் செலுத்தி அவனவன் சூழ்



நிலையைத் தூயதாக்கிக் கொள்ள வசதியும் மனப்பான்மையும் ஏற்படும்படி சர்க்கார் வழி வகுக்க வேண்டும், இதனால் பொது சுகாதாரமும் தானே சீர்படும், பொது சுகாதாரத்தில் மாத்திரம் கவனத்தைச் செலுத்தி தனி சுகாதரத்தை சர்க்கார் புறக்கணிக்கும் போது "பாப் பாத்தியம்மா மாடுவந்தது" என்ற கதையைத் தழுவிய சர்க்காரின் பொறுப்பற்ற செய்கைபற்றி நாம் வருந்தத்தான் வேண்டிவரும்.

தனிமனிதன் தன்னகத்தையும் புறத்தையும் தூயதாக்கிக் கொள்வதன் மூலம் சமூகத்தின் சூழ்நிலையையும் தூயதாக்கிக் கொள்ள முடியும். இந்த வழியில் ஈயும் கொசுவும் மனிதனுக்கு எதிரிகளாகமாட்டா. மனிதன் ஈயையும் கொசுவையும் கண்டு பதறும் நிலையும் ஏற்படாது.

இதைப் பொது மக்களும் சர்க்காரும் ஆழ்ந்து சிந்திப்பது அவசியம்,

# இணைப்பு வைத்திய முறை

*இணைப்பு வைத்திய முறை என்ற பெயரால் போதனையும் சிகிச்சையும் நடைபெறும் இந்திய வைத்திய காலேஜ், ஆஸ்பத்திரி ஆகிய இரண்டையும் பற்றிய இன்றைய நிலை திருப்திகரமாக இல்லை. ஆயுர்வேதம், சித்த வைத்தியம், யூனானி ஆகிய மூன்று பிரிவினரும் கொண்ட ஒரு போர்டை அமைத்திருக்கிறார்கள். போர்டின் அதிகாரங்கள் யாவை? இந்திய முறைகளின் அபிவிருத்திக்கும், அவற்றில் நல்லபடியாக ஆராய்ச்சி நடக்கவும் அது என்ன செய்யப் போகிறது? இப்பொழுது நடைபெறும் போதனா முறையை நியாயமான விதத்தில் மாற்றியமைத்து ஒழுங்கு படுத்தும் பொறுப்பு அதற்கு உண்டா? அதை எவ்வாறு செய்யப்போகிறது? இந்திய வைத்திய முறையின் போதனை ராஜ்யத்துக்கு ராஜ்யம் மாறுபட்டிருப்பது நல்லதல்லவே? ஏறக்குறைய ஒரே மாதிரியான முறை சென்னை, கோளம், மைசூர், ஆந்திரா காலேஜுகளில் இருந்து வரச்செய்வது குறைந்தபட்சத் தேவையல்லவா? இத்தகைய இணக்கமான ஒத்து*

ழைப்பு ஏற்படுவதற்கு என்ன செய்ய உத்தேசம்? இந்தக் கேள்விகளெல்லாம் அலட்சியம் செய்யக்கூடியவை அல்ல; கவனிக்க வேண்டியவையே.

இந்திய வைத்திய முறைகளின் வளர்ச்சிக்கு என்று ஏற்பட்டவை கீழ்ப்பாக்கத்திலுள்ள காலேஜும் ஆஸ்பத்திரியும். ஆனல் நழைத் தேய்ந்து கட்டெறும்பானதுபோல நாட்டு வைத்திய போதனை குறைந்து, நவீன வைத்தியம் எனப்படும் மேற்கத்திய முறையின் போதனை அதிகரித்துவந்து, இரண்டுங்கெட்ட நிலையில் உள்ள பட்டதாரிகளைத் தயாரிக்கத்தான் இப்பொழுது பயன்படுகிறது. இந்த மாதிரியான வக்கிரப்போக்கிற்கு சர்க்கார் கூறிவந்துள்ள சமாதானம் வியப்பை அளிக்கும். மேலை முறை போதனை அதிகமாகவேண்டும் என்று மாணவர்கள் கேட்கிறார்கள். இப்போதைய ஏற்பாடு அவர்களுக்குத் திருப்தியளிக்கிறது என்று கூறுகிறார் மந்திரி. மாணவர்களைக் கேட்டு பாட போதனை, பரீட்சைத் திட்டம், வேலை வாய்ப்பு முதலியவற்றை வேறு ஸ்தாபனங்களில் நிர்ணயித்து அமல் நடத்துவதாக நாம் கேள்விப்பட்டதில்லை. எதை வேண்டுமானாலும் பொறுப்பற்ற முறையில் பதவியில் உள்ளவர்கள் பேசலாம். அது அறிவுரையாகிறது என்பது இன்றைய பொது வாழ்வில் சகஜமாகி வரும் நிலவரம். மாணவர்களுக்கு நடைமுறையில் நவீன முறை போதனை அதிகமாகத் தேவையாயின் மெடிகல் காலேஜுகளை அதிகப்படுத்துவதுதான் நியாயம். இந்திய வைத்திய முறைகளின் போதனை என்று சொல்லிக் கொண்டு, நடைமுறையில் அதைக் கடுகளவாக்கிவிட்டு, நவீன முறைகளை பிரதானமாக போதிக்கும் பித்தலாட்டம் வேண்டியதில்லை.

இந்திய முறைகளை நன்கு, சாஸ்த்ரீய விதிகளையும் தற்காலத் தேவைகளையும் வசதிகளையும் ஒட்டி கற்கவேண்டும். அதுதான் பிரதானம். அத்துடன்கூட, நவீனத்துறையிலுள்ள உடற்கூறுப்படிப்பு, பரிசோதனை முறைகள், அற்புத மருந்துகளின் தன்மையும் பிரயோகமும் போன்ற அம்சங்களைச் சொல்லிக்கொடுப்பது மிக மிக அவசியம். அத்துடன் ரணசிகிச்சையில் முழுத் தகுதி நவீன முறைகளின்படி அளிக்கப்படுவதும் அவசியம். காசி ஸர்வகலாசாலையில் இருந்துவரும் திட்டத்தை ஆராய்ந்து பார்த்து, கோளா, மைசூர், ஹைதராபாத் ஆயுர்வேத காலேஜுகளின் பொறுப்பாளரையும் அழைத்துப்பேசி, உண்மையில் இந்திய வைத்திய முறைகள் அபிவிருத்தி அடையக்கூடியவாறு நல்லதோர் திட்டம் வகுத்து அமல் நடத்த வேண்டிய தருணம் வந்துவிட்டது. இந்தப் பொறுப்பை இனியும் தட்டிக் கழிக்கலாகாது.

— தி. ம.

# காயகல்பம்—இரஸாயன முறை

(சென்ற மாதத் தொடர்ச்சி)

ஆயுர்வேத ஸம்ஹிதைகளில் வ்யவஹரிக்கப்படுகிற ஜீமூத கல்பம், மதன கல்பம் முதலிய வித்தௌஷதங்களுக்கும் தற்காலம் 'காயகல்பம்' என்று எவ்விதமாகவோ சொல்லப்படும் இரஸாயன முறைக்கும் யாரும் ஒரு ஸம்பந்தத்தைக் கல்பித்தாலும் கல்பிக்கட்டும். எப்படியாயினும் முனிவர்களும் ஆசையுடன் ஏற்கக் கூடிய முக்யமான பிரயோஜனம் எவ்விதம் இதற்கு ஏற்படுகிறது? இதற்கு ரஸாயனம் என்கிற பெயர் ஏற்பட்டதன் காரணம் என்ன? இதை நிறைவேற்றும் வழி எப்படி? என்கிற இது முதலியவைகளை பலர் அறிய ஆவலுள்ளவர்களாயிருக்கக்கூடும். ஆகையால் சாஸ்த்ரப்ரமாணங்களைக்கொண்டே விஷயங்களை விவரிப்போம்.

ஒவ்வொருவரும் உண்ணும் ஆஹாரம் முழுவதும் ஆமாசயத்திலும் (இரைப்பை) ஆந்த்ரத்திலும் (குடல்) பக்வமாகி ரக்தத்தில் சேருவதற்கு முன் ஒருவிதமான வெள்ளை நிறக் குழம்பு நிலைமையை அடையும். அவ்விதக் குழம்பை ஆயுர்வேதிகள் இரஸ தாது எனவும் கூறுவர்கள். இந்த தாது ரூபமான இரஸம் இரஸாயனிகள் என்கிற ஸ்ரோதோமுகங்களில் (லாக்டியல்ஸ்) பாய்ந்து ரக்தத்துடன் கலந்து ரஞ்சகபித்தம் என்னும் உஷ்ணத்துடனுள்ள நிறப்பொருள் முதலியதோடு கலந்து ரக்த தாதுவாகப் பரிணமித்துப் பிறகு வரிசையாக மாம்ஸாதி தாதுக்களையும் வெளி உள் உறுப்புகளையும் எப்போதும் போஷித்து வருகிறது. இதே ஸமயத்தில் மலம், மூத்திரம், வியர்வை, நிச்வாஸம் முதலியவைகள் மூலம் வெளியாகும் கழிவு சரீரத்துக்கு நஷ்டத்தை அளிக்கும் செய்கையாகும். உண்ணும் ஆஹாரம் சிறிய வயது முதல் கிழத்தனம் வரை. மேலே விவரித்தபடி தேஹத்தில் ஏற்படும் நஷ்டத்தைச் சரிப்படுத்தி ஒரு சிறிது போஷணைக்குமட்டில் உபயோகப்படுகிறது. எப்போதுமுண்டாகும் மலாதி ரூபமான கழிவுகளை ஈடு செய்யவே உண்ணும் உணவு உதவுகிறது. கிழத்தன்மை நெருங்க நெருங்க கழிவு ரூபமாகிற நஷ்டத்தை ஈடு செய்ய மட்டில் உபயோகிக்கும் உணவாகிய போஷணை உடலுக்குப்போதாது. வாலிபப்பருவத்திற்குப் பின்பு கூட ரஸம் ரக்தம் முதலிய தாதுக்களின் சிதைவை ஈடுசெய்யவும், மேலும் அவற்றின் செழிப்பை விருத்தி செய்யவும் ஓகஸ் என்கிற உயிருக்கு இன்றியமையாத உத்தமதாதுவை அபிவிருத்தி செய்து உத்ஸாஹ பலங்களை உயர்நிலைமைக்குக் கொண்டுவருவதற்கும், அதிகமான போஷணைக்கு வகை தேடினாலல்லது வயதான தன்மையால் உடல் தளர்ந்து, வலிமை இழந்து, ஊக்கமில்லாமல் உயிர் வாழ வேண்டிய காலமும் குறைந்துவிடும். ரஸம் முதலிய எல்லா தாதுக்களும் அதிக போஷணையையும் திடத்தையும் ஆயுளாரோக்ய

அபிவிருத்தியையும் அளிக்கும் உபாயமாகவே இரஸாயனம் என்கிற முறையை முனிவர்கள் அறிந்து வெளியிட்டிருக்கிறார்கள். வயது ஆக ஆக சரீர தாதுக்களில் ஏற்படும் சீரழிவு என்னும் நஷ்டம் அதிகமாவதும், அவற்றுக்கு அவசியமான போஷணை யென்னும் இலாபாம்சம் கிரமமாகக் குறைவதும் இயற்கை. ஆகவே சரீர தாதுக்களில் ஏற்படும் சீரழிவு என்னும் நஷ்டத்திற்கு ஈடுசெய்யும் ஸாதாரண போஷணத்துடன் விசேஷபோஷணத்தைச் செய்யும் வழியைத் தேடினாலன்றி சரீர பலமும், உத்ஸாஹமும், வாழ்க்கையும் நீடிக்க இயலாதென்கிற உண்மையைக் கண்டு முன்னோர்கள் "ரஸாயனம்" என்னும் உயரிய பெயரை அளித்தனர். இவ்வுண்மையை ஒரு ஸூத்ரம் போன்ற வாக்கியத்தால் சரகமஹர்ஷி கூறுகிறார் :—

வலா "...भोपायो हि शस्तानां रसादीनां रसायनम्" என்று.

...ணிகளின் ஜீவதாதுக்களுக்கு இரண்டு வகையில் சீரழிவு ஏற்படு... முதலாவது வயது ஆக ஆக இயற்கையாக ஏற்படும் மூப்பினால் வரும் சிதை... மற்றது மனம், உடல் இவைகளில் ஏற்படும் வியாதிகள் மூலம் ...ாகும் சிதைவு.

ஆயுர்வேதத்தில் கூறப்பட்டிருக்கும் அஷ்டாங்கங்கள் என்கிற எட்டு வகை சிகிச்சைகளில் ஏழு வகை சிகித்ஸைகளும் நோய் அல்லது செயற்கைக் கோளாறுகளால் ஏற்படும் சீரழிவை நீக்கும் உபாயங்களாகும்.

கிழத்தனத்தாலாகும் சீரழிவையும் பிரதிதினமும் ஏற்படும் சீரழிவையும் சரிப்படுத்தி சரீர தாதுக்களுக்கு அதிகமான போஷணையை அளித்து வியாதிகளையும் கிழத்தனத்தால் ஏற்பட்ட தீமைகளையும் அண்ட விடாமல் திடத்தையும், ஆரோக்யத்தையும் அபிவிருத்தி செய்யும் சிகித்ஸையே "ரஸாயனம்" என்னும் பெயரால் வழங்கப்படுகிறது.

இதையே சார்ங்கதரன்

"रसायनं तु तज्ज्ञेयं यज्जराव्याधिनाशनम्"

என்று விவரிக்கிறார்.

ரஸம் முதல் சுக்ரமீறாக ஏழு தாதுக்களுடையவும் ஸத்வரூபமான "ஓஜஸ்" என்னும் ஒரு தாது உண்டு. உயிர் வளர்ச்சிக்கும் உத்ஸாஹ விருத்திக்கும் ஊக்கம் குறையாமல் உழைக்கும் சக்திக்கும் உயர்ந்த ஸாதனம் இது என்று ஆயுர்வேதியர் கூறுவர். ஆரோக்ய நிலைமையிலும் இந்த எட்டாம் தாதுவுக்கு வளர்ச்சியைத் தரும் ஔஷதம் இரஸாயனமாகவும், வ்ருஷ்யமாகவும் உபயோகப்படும். இதையே,

"स्वस्थस्यौजस्करं यत्तु तद्वृष्यं तद्रसायनम्"

என்று ருஷிகள் கூறுகின்றனர். (தொடரும்.)

# குப்தஸித்த யோகங்கள்

(கல்பகன்

[பல பிரபல வைத்யர்கள் தமது அனுபவத்தில் கைக... யோகங்கள் பலவற்றை அறுவசி பிரசாரத்திற்குப் ப... மறைத்துக் காப்பாற்றி வருகிறார்க... அவ்வித யோ... சில சமயத்தில் வைத்ய உலகத்திற் பேருதவியாக ... வதும் உண்டு. அவைகளைச் சேகரிது இந்த தலைப்பி... தொகுத்துத் தருவதில் வைத்ய சங்கை பெருமையை... கீழே வெளியாகியுள்ள யோகங்கள் ...வந்தரி என்... பத்திரிகையின் குப்தஸித்த பிரயோகங்கம் என்ற ...ரிகாய... மலரில் வெளியானவை. இப்பத்திரி... அவிகர் பக்கத்திலு... விஜயகர்ரிலிருந்து வெளியாகிறது. பாகத்தை வெளியிட்... ...ன் பெயரையும் யோகத்தில் கடைசி தருகிறோம்.

— ஆசி...ர்.]

* * * * *

குபோரகஷிவடீ. ஆமாசயத்தில்ற்படும் புண் வேக்காளம் கிரஹணியின் ஆரம்பபாகத்தில் (DIDENUM) ஏற்படும் புண் அல்லது வேக்காளம் இவைகளில் நற்குணம் தருவது.

கழற்சி விதைப்பருப்பு 4 தோலா தாம்ரபஸ்மம் ½ தோலா, ஏலரிசி 1 தோலா பூலாங்கிழங்கு ஒருதாலா, பச்சைக்கர்ப்பூரம் ½ தோலா இவைகளில் கர்ப்பூரத்தையும் ஏலரிசியையும் ஒரு நாள் முழுதும் கல்வத்திலிட்டரைத்துக் கெண்டேயிருந்து மறு நாள் மற்ற சரக்குகளையும் சேர்த்து ஜலம் விட்டரைத்து மாத்திரை செய்து கொள்ளவும்.

தினம் காலை மாலை 2 வேளை ஜலத்துடன் சாப்பிடலாம்.

— ஸ்ரீலா பத்ரீநாராயணஸேன்,
முஸப்பர்பூர்.

ஓஜோமேஹாரி ரஸம். ஓஜோமேஹம் எனப்படும் ஆல்ப்யூமன்யூரியாவிலும் விருக்கங்களில் ஏற்படும் வீக்கம் வேக்காளம் புண் இவைகளிலும் இதன் உபயோகம் மிகச்சிறந்தது.

1. வெண் சந்தனம், வால் மிளகு கந்தாபிரோஜா சத்து, ஸூர்யகாந்திப்பூவின் உள்முளை, வெள்ளரி விதையுள்பருப்பு, கோமூத்ர சிலாஜது வகைக்கு ஒரு தோலா, அயஸ்ஸிந்தூரம் ½ தோலா, மூக்கரட்டை, மருதம்பட்டை இவைகளின் பட்டையின்

சாறு, அல்லது கஷாயத்தில் வகைக்கு 7 பாவனை செய்து 100 மாத்திரைகளாகச் செய்துகொள்ளவும்,

2. கோழிமுட்டை ஓட்டின் பஸ்மம் $\frac{1}{2}$ தோலா, மூக்கரட்டை நெரிஞ்சில், மூங்கில், நாயுருவி இவைகளின் க்ஷாரம், மாவிலங்கன் பட்டை இவை வகைக்கு ½ தோலா, இவைகளை மாவிலங்கம் பட்டையின் சாற்றில் அரைத்து 100 மாத்திரைகளாக்கிக் கொள்ளவும்.

முதல் மாத்திரை...டன் சாப்பிட்டு ஒரு மணி நேரம் ... இரண்டாவது ...த்திரையை ஜலத்துடன் தினம் 2 ...ப்பிடவும்.

— ஸ்ரீலாலா பதரீநாராயணஸேன்.

அச்மரீஹரம், கீழ்கட வகை சிகித்ஸை நீர்த்தாரையில் ஏற்படும் கல்லடைப்பிலும் நல்ல குணம் தருகிறது. மூத்ராச்மரியில் இதன் உபயோகம் மிகச் சிறந்தது. பித்தாச்மரியில் இதன் உபயோகம் பரீக்ஷிக்கப்பட்டு வருகிறது. மூத்ராச்மரியில் விருக்கத்திலும் முக்கியமாக விலாவெலும்புகளுக்குக் கீழே முதுகின் பக்கத்தில் வயிற்றுவலி உண்டாகி மூத்ரமும் அபான வாயுவும் தடைபெறுகிற. இதில் அச்மரீஹரம் மிகவும் குணம் தருகிறது. ஆக்ரா அஷ்டாங்க ஆயுர்வேத கலாசாலை புரொபஸர் ஸ்ரீ கிரிஜா சரணஜீப்த அவர்களது வம்சபரம்பரையில் இது பிரஸித்தமானது. சில நிமிஷங்களிலேயே வலி குறைந்துவிடுவதும் 2-3 வேளை மருந்துகள் கொடுத்தவுடன் கல்லும கரைந்து வலியில்லாமல் மூத்ரம் வெளியாவதும் இதில் ஏற்படும் அதிசயம்.

பூவந்திப்பட்டை, 2 தோலா, பூந்திவிதைப் பருப்பு 1 தோலா, ஸ்வர்ண வங்கம் செய்தபின் மீதியுள்ள க்ஷாரம் $\frac{1}{4}$ தோலா, இவைகளை மூக்கரட்டை, நெரிஞ்சில் இவைகளின் பஞ்சாங்கத்தின் ஸ்வரஸம் அல்லது கஷாயத்தில் 3 பாவனை செய்து கடலையளவு மாத்திரை செய்யம்.

ஒரு மாத்திரையை விழுங்கிவிட்டு ஜலம் சாப்பிடவும். கடித்து சாப்பிடக்கூடாது. அரை அல்லது ஒரு மணி நேரத்திற்குப் பின் இரண்டாவது மாத்திரை சாப்பிடவும். வலி கட்டாயம் நின்றுவிடும்.

கற்களை உடைக்கக் கீழ்கண்ட மருந்து நல்லது. ரஸகர்ந்தக கஜ்ஜலி 6 தோலா, அய்ஸிந்தூரம் 2 தோலா, தாம்ரபஸ்மம்



1 தோலா இவைகளை அரைத்து பர்படி முறைப்படி பர்படியாக்கிக் கொள்ளவும். இதற்குச் சம அளவு யவக்ஷாரம் சேர்த்தரைத்துக் கொள்ளவும். இதில் 4-8 யவ அளவு தேனுடன் சாப்பிடவும். அனுபானமாக கீழ் கண்ட கஷாயம் சாப்பிடவும்.

சிறு நெரிஞ்சில் $\frac{1}{2}$ தோலா, சிறு பூளை $\frac{1}{4}$ தோலா, பெரிய கடுக்காய்த் தோல் $\frac{3}{4}$ தோலா, மாவிலங்கம் பட்டை $\frac{3}{4}$ தோலா. சிறுகாஞ்சூரி $\frac{1}{2}$ தோலா, சரக்கொன்னைப்புளி $\frac{1}{4}$ தோலா இவைகளின் கஷாயத்தில் யவக்ஷாரம் $\frac{1}{8}$ தோலா, சிலாஜது 8 யவம் கரைத்து தேன் சேர்த்து காலை மாலை சாப்பிடவும்.

ஒரு மாதத்திற்குள் கல் கரைந்துவிடும்.

பால், நெய், கோதுமை, ரொட்டி, லகுவான கரிகாய்கள், பழங்கள் முதலியவை பத்தியமானவை. மிளகு, மசாலா, பருப்பு, தயிர் இவை அபத்தியமானவை

— பிருஹ்மானந்த வித்யாலங்கார், ஆக்ரா.

# சித்த வைத்திய ஆராய்ச்சிக் கழகம்

## தென்காசி அருகே திறக்கப்பட்டது

தென்காசி, ஆக. 2— இங்கிருந்து [illegible] மைல் தூரத்திலுள்ள பம்புளியில் சித்த வைத்திய ஆராய்ச்சிக் கழகத்தை சென்னை சுகாதார மந்திரி ஸ்ரீ எம். வ. மாணிக்கவேலு நேற்று திறந்து வைத்தார்.

வெகு காலமாக சித்த வைத்திய முறை அமுலிலிருந்து வருவதாகவும், ஆனால் நன்கு பயிற்சிக்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும், சாதாரணமாகப் படித்தவர்கள் வைத்திய சிகிச்சை அளிக்க அனுமதிக்கப்படக்கூடாதென்றும், இது வாழ்க்கை அல்லது மரணத்தைப் பொறுத்த விஷயம் என்றும், நன்கு பயிற்சி பெற்று சிகிச்சை அளிக்கக் கூடிய வைத்தியர்களின் ரிஜிஸ்டர் வைத்திருக்க வேண்டுமென்றும் கூறினர்.

உள்நாட்டு மந்திரி ஸ்ரீ எம். பக்தவத்ஸலம் பேசுகையில், திருக்குற்றால மலையில் பல அரிய மருந்து மூலிகைகள் கிடைக்கின்றன என்றும், இதற்கென்று சில பிரதேசங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன என்றும், தாவர நூல் கற்கும் மாணவர்கள் இங்கு விஜயம் செய்து வருகிறார்களென்றும் கூறினர்.

இந்த ஆராய்ச்சிக் கழகத்தை ஸ்தாபித்தவர்களையும் பாராட்டினர்.

## வாத வியாதி சிகித்ஸை.

வாதத்தால் விகிருதி அடைந்த அங்கங்களில் சிற்றாமுட்டி கஷாயமும் பாலும் சேர்த்த திரவத்தில் வேகவைத்த அறுபதாங் குருவை அன்னத்தைக் கிழிகட்டித் தேய்க்கலாம். 3¼ நாழிகை கழித்து அதை கைபொருக்கும் சூட்டிலுள்ள வென்னீர் விட்டு அலம்பிக் கொள்ளவும்.

பால் சேர்த்து சிற்றாமுட்டி வேரைக் கல்கமாக்கிச் சேர்த்துத் தயாரித்த தைலமும் நல்லது.

**சுத்த பலாதைலம்.** நல்லெண்ணெய் ஒரு பங்கு, பசுவின் பால் ஒரு பங்கு, சிற்றாமுட்டிவேர் கஷாயம் 4 பங்கு, சிற்றாமுட்டிவேர் கல்கம் ¼ பங்கு சேர்த்துக் காய்ச்சிய தைலம் உள்ளுக்குச் சாப்பிடவும் மேலுக்குத் தேய்க்கவும் நல்லது.

**க்ஷீரபலாதைலம்.** 20 பலம் சிற்றாமுட்டி வேரை இடித்து எடுத்த சாறு அல்லது கஷாயம், நல்லெண்ணெய் 64 தோலா, பால் 256 தோலா, சிற்றாமுட்டி வேர் கல்கத்திற்காக 8 தோலா இவைகளை முறைப்படி தைலமாகக் காய்ச்சி வடிகட்டிக் கொள்ளவும். வாத வியாதிகளில் நல்லது.

**வாதாசனிதைலம்,** நல்லெண்ணெய் 64 தோலா, தண்ணீர் விட்டான் கிழங்கு 400 தோலாவை இடித்து 6¼படி ஜலத்தில் கால் பங்கு மீதமாகக் கஷாயமிட்டு வடிகட்டிய கஷாயம், கோஷ்டம், சதகுப்பை, தேவதாரு, சந்தனக்கட்டை, ஜடாமஞ்சி, கல்பாசி, ருத்ராக்ஷம், ஜீவகம், ருஷபகம், மாவிலங்கம்பட்டை, வசம்பு, சிற்றாமுட்டி வேர், தகரவிதை, ஏலரிசி, வாய்விளங்கம், ஆவல்பட்டை, புங்கம்பட்டை, ஓரிலைவேர், மூவிலைவேர் வகைக்கு ஒரு தோலா- இவை கல்கம், பசுவின் பால் 256 தோலா, இவைகளை முறைப்படி தைலமாகக் காய்ச்சி வடிகட்டிக்கொள்ளவும். ச்வாஸம், காஸம், செவிடு, நொண்டி, மூடம், நாக்கு ஸ்தம்பம், கிழடு, ஆண்மை யிழத்தல், உடல் இளைப்பு, எலும்பு ஒடிதல், மூட்டுவலி, சினப்புகள், விஸர்ப்பம், அண்டவிருத்தி, நீர்ச் சுருக்கு நீரடைப்பு, கல்லடைப்பு, வாதகுண்டலி, பிரமேஹம், மற்ற வாத வியாதிகள் இவைகளில் உள்ளும் புறமும் உபயோகிக்க நல்லது.

## கிரஹணீ நிதானம்.

அதிஸாரம் வந்து நீங்கியோ நீங்காமலோ இருக்கும் நிலையில் அக்னி மந்தம் இருக்கையில் அபத்ய உணவு உட்கொண்டால் மேலும் மந்தம் அதிகமாகி கிரஹணியைக் கெடுத்து இந்நோய் ஏற்படுகிறது. கிரஹணிக்கு ஜடராக்னி பலமளிக்கின்றது. ஜடராக்னிபலத்தைக்கொண்டு தான் கிரஹணி தன் காரியத்தைச் செய்கின்றது.

தொப்புளுக்குமேல் ஆமாசயத்திற்கும் பக்வாசயத்திற்கும் நடுவிலுள்ள ஜீரணக்கருவியை கிரஹணி என்பர். அது அக்னி பலத்தை ஆதாரமாகவும் போஷகமாகவும் கொண்டு பித்ததர கலையாக இருப்பதால் அபக்வமான ஆகாரத்தை ஏற்றுப் பாகம் செய்து மலமாகவும் ஸாரமாகவும் பிரித்து ஸாரத்தை பக்கங்கள் வழியாக உட்செலுத்தியும் மலத்தைக் கீழே தள்ளியும் ஜீரணத்தில் உதவுகின்றது

வாயு பித்தம் கபம் இம்மூன்றும் தனித்தோ இரண்டாகச் சேர்ந்தோ மூன்றாகச் சேர்ந்தோ கிரஹணியைக் கெடுக்கும்போது சாப்பிட்ட உணவை ஜீரணமாகாததாகவோ ஜீரணமானதாகவோ வலியுடனும் மிகுந்த நாற்றத்துடனும் சில சமயம் கட்டியும் சில சமயம் நெகிழ்ந்தும் வெளியாக்கும். இதை கிரஹணி நோய் என்பர். கிரஹணி என்னும் உறுப்பின் பலவீனத்தால் ஏற்படுவதால் கிரஹணி என நோய்க்கும் பெயர்.

அதுவருமுன் நாவரட்சி, சோம்பல், பலக்குறைவு, அன்னம் சரியாக ஜரியாமை, வயிற்றில்புண், அன்னம் ஜீரணமாக அதிக நேரமாதல், உடல் கனம் முதலிய குறிகள் காணும்.

**வாதகிரஹணீ.** காரம் துவர்ப்பு கசப்பு மிக்கதும், வரண்டதும் கெட்டதுமான உணவு; அளவுக்குக் குறைந்தோ அதிகமாகவோ உண்ணுதல், மல மூத்திராதிகளின் வேகத்தை அதிகமாக அடக்குதல், அதிகப் புணர்ச்சி, இவைகளால் வாயுவிற்குப் பிரகோபம் ஏற்பட்டு அக்னிமந்தமாகி உணவு மிகவும் சிரமத்துடன் ஜீரணமாகும். மலம் வரண்டிருக்கும். உடல் கரகரப்பாகும், தொண்டை வாய் உலரும், பசி, தாகம் மிகும். கண் இருளும், காதில் சத்தம் கேட்கும், விலா, இடுப்பு, கழுத்து இவைகளில் வலி, அடிக்கடி கடுப்பாக மலப்பிரவிருத்தி, மார்வலி,



188869
சென்னை-600 0…

இளைப்பு, பலக்குறைவு, நாவில் ருசியின்மை, வயிற்றில் கத்திரி போட்டு நறுக்குவது போல வலி, எல்லா சுவைகளிலும் விருப்பம், மனது களைத்தல், ஜீரணமாகும்போதும் ஆனபின்பும் வயிறு உப்புசம், வலி சாப்பிட்டவுடன் அமைதி; வாதகுல்மம், ஹிருதய நோய், ப்லீஹம் இந்நோய்கள் ஏற்பட்டுள்ளது போன்ற கவலை, கஷ்டப்பட்டு தாமதத்துடனும் சிறிது திரவமாகவும் சிறிது வரண்டும் மெல்லியதாகவும் அஜீரணத்துடன் சத்தத்துடனும் நுரையுடனும் அடிக்கடி மலப்பிரவிருத்தி, காஸம் சுவாஸம் இவை இதன் அறிகுறிகள்.

**பித்தகிரஹணீ.** உரைப்பும் கார்ப்பும் புளிப்பும் மிக்க உணவு கொள்ளுதல், விதாஹ அஜீர்ணம் இவைகளால் அக்னிமந்தம் ஏற்படுகின்றது, வென்னீரால் நெருப்பு அணைப்பது போல. பித்தாஜீர்ணம், கருத்தும் மஞ்சளாகவும் மலம் திரவமாக வெளியாகும். புளித்த நாற்றமுள்ள ஏப்பம், தொண்டை மார்பில் எரிச்சல், அருசி, நாவரட்சி இவை ஏற்படும்.

**கபக்கிரஹணீ.** எளிதில் ஜீர்ணமாகாததும் மிகவும் கொழுப்புள்ளதும், குளிர்ந்ததுமான உணவு. அளவுக்கு அதிகமான உணவுசாப்பிட்டவுடன் தூக்கம் இவைகளால் கபம் மிகுந்து கிரஹணி கெடுகின்றது, கஷ்டப்பட்டு ஜீரணமாகும். உமட்டல், வாந்தி, அரோசகம், வாயில் குழகுழப்பு, வாயில் இனிப்பு, இருமல், காறித்துப்புதல் தலைச்சளி, ஹிருதயம் உறைவதுபோலவும் வயிறு திமிர்த்தும் கனத்தும் இருக்கும். கெட்ட இனித்த ஏப்பம், உடல் சோர்வு, காமவேகத்தில் வெறுப்பு, தளர்ந்த அஜீரணமான கனமான மலம் வெளியாகுதல், உடல் இளைக்காமலே பலவீனத்தை உணர்தல், சோர்வு இவை இதன் குறிகள்.

**ஸந்நிபாத கிரஹணீ.** மூன்று தோஷங்களின் பிரகோபமும் அதனால் ஏற்படும் முத்தோஷக் குறிகளும் இதில் காணும்.

**ஸங்கிரஹ கிரஹணீ:** வயிற்றில் இரைச்சல், சோர்வு, பலவீனம், அசதி, திரவமாயும் கனத்துடனும் வெளுத்தும் பிசுபிசுப்புடனும் இடுப்பு வலியுடனும் மலம் வெளியாதல். அதில் ஆமமும் சீதமும் வெளியாகும். மலம் வெளியாகும் போது இரைச்சலுமிருக்கும். பக்ஷத்திற்கோ மாஸத்திற்கோ பத்து நாட்களுக்கோ ஒருதடவை அல்லது தினமும் இந்நோய் வரலாம். இரவில் தொந்தரவு குறைந்தும் பகலில் தொந்தரவு மிகுந்தும் காணும். கண்டுபிடிப்பதில் சிரமமுண்டு. சிகித்ஸை செய்வதும்



கடினம். வெகு நாட்கள் தொடர்ந்து இருக்கும். ஆமமும் வாயுவும் பிரதான காரணமாகும்.

இதில் வாந்தியும் பேதியும் அதிகமாக ஏற்பட்டால் 15 நாட்கள் தான் ஜீவித்திருப்பான்.

**கடீயந்திர கிரஹணீ.** (घटीयन्त्रग्रहणी) தூங்கும் போது விலாப்புறத்தில் புரண்டு படுக்கையில் சிறிய குடத்தின் வாயிலாக ஜலம் வெளியாகும் போது ஏற்படும் சப்தம் போல குடகுட என சத்தம் கேட்டால் இதை கடீயந்திர கிரஹணி என்பர். கிரஹணி உறுப்பே பலமிழந்து தன் செய்கையை முற்றிலும் செய்யாதிருப்பதால் இது மிகவும் அஸாத்தியம்.

**கிரஹணியில் ஆமம்.** உணவு அளவுக்குமீறி இருந்த நிலையில் இடமில்லாமை காரணமாக ஏற்படும் குழப்பத்தாலும், அளவுக்குக் குறைந்த நிலையில் புளிப்பு பாகம் ஏற்படுவதாலும் ஜீர்ணமாகாத அன்னம் வெளியாவதை ஆமம் என்பர்.

அதிஸாரத்தில் உள்ள மற்ற ஆம பக்வ லக்ஷணங்கள் முதலியவையை இதிலும் சேர்த்துக் கொள்ளலாம். பாலனுக்கு ஏற்படும் கிரஹணி ஸாத்யமே. நடுவயதினனுக்கு கஷ்டஸாத்யம். வயதானவர்களுக்கு அஸாத்யமே.

## கிரஹணீ சிகித்ஸை.

கிரஹணியில் ஏற்பட்ட தோஷத்தை அஜீர்ணத்திற்கான சிகித்ஸை செய்து சரிப்படுத்தலாம். லங்கனமும் தீபனமும் அதிஸாரத்திற்கான மருந்தும் நல்லது. ஆமமுள்ளதையும் இல்லாததையும் அதிஸாரத்திற்கான பரீக்ஷையாலே அறியலாம். ஆமத்தை ஜீர்ணமாகச் செய்வதற்கும், அதிஸாரத்திற்கான வழியே போதுமானது. பஞ்சலவணம், பஞ்சகோலம் இவைகள் சேர்ந்த கஞ்சி வகை, மோர், மற்றும் தீபனமான உணவுகள் நல்லவை. வாதகிரஹணியில் ஆமம் பாகமடைந்துள்ளதை அறிந்து தீபனமான ஔஷதங்களால் தயாரான நெய்களால் சரிசெய்ய வேண்டும்.

**வாதகிரஹணியில்.** வயிறு உப்புசமும் சிக்கலுமுள்ள வாத கிரஹணியில் கொத்துமல்லிவிதை வில்வப்பிஞ்சு, சித்தாமுட்டி வேர், சுக்கு ஓரிலை இவைகளாலான கஷாயமும் பானீய கஷாயமும் நல்லது.

**பஞ்சமூலாதி கிருதம்:** ஓரிலை, மூவிலை, கண்டங்கத்திரிவேர், முள்ளுக்கத்திரிவேர், நெரிஞ்சில், கடுக்காய், சுக்கு, திப்பிலி, மிளகு, கண்டதிப்பிலி, இந்துப்பு, சித்தரத்தை, யவக்ஷாரம், ஸர்ஜக்ஷாரம், ஓமம், வாய்விளங்கம், பூலாங்கிழங்கு, இவைகளாலான கல்கமும், கல்கத்திற்கு நான்கு பங்கு பசுநெய்யும், துரிஞ்சிச்சாறும், காய்ந்த முள்ளங்கிக் கஷாயமும், இலந்தைக் கொட்டைக் கஷாயமும், காடியும் மாதுளம்பழச்சாறும், மோரும் தயிர்தெளிவும் மத்யத்தின் வண்டலும், கோதுமைக் காடி, புளிப்பான பழச்சாற்றின் காடி, தவிட்டுக்காடி இவை வகைக்கு நெய்க்குச் சம அளவு சேர்த்து நெய் காய்ச்சிக் கொடுக்க நல்ல பசி ஏற்படும். சூலம், குல்மம், உதரம், வயிற்று உப்புசம், இளைப்பு, வாயு இவைகளைப் போக்கும்,

**சுண்டி கிருதம்.** சுக்கைக் கல்கமாக்கிக் கலந்து காய்ச்சிய நெய் வாதத்தை அனுலோமனம் செய்யும். கிரஹணி, பாண்டு, ப்லீஹம், காஸம், ஜ்வரம் இவைகளைப் போக்கும்.

**பித்தகிரஹணியில்:** ரஸாஞ்சனம், அதிவிடயம், வெட்பாலைப் பட்டை, வெட்பாலையரிசி, சுக்கு, காட்டகத்திப்பூ இவை வகைக்குச் சமனெடை தூள் செய்து கலந்து தேன் சேர்த்து அரிசி கழுவிய ஜலத்துடன் சாப்பிட பித்த கிரஹணி, பித்த தோஷம், மூலம், ரக்தபித்தம், பித்தாதிஸாரம் இவை நீங்கும். வில்வப்பிஞ்சின் கல்கத்தை சுக்குத்தூளுடன் கலந்து வெல்லம் சேர்த்துச் சாப்பிட கிரஹணீ குறையும். மோர் அன்னம் உட்கொள்ளவும்.

**நாகராதி சூர்ணம்.** சுக்கு, அதிவிடயம், கோரைக்கிழங்கு, காட்டகத்திப்பூ, ரஸாஞ்சனம், வெட்பாலைப்பட்டை, வெட்பாலையரிசி, வில்வப்பிஞ்சு, வட்டத்திருப்பி, கடுகுரோகிணி இவை வகைக்குச் சம எடை தூள்செய்து தேன் சேர்த்து அரிசி கழுவிய ஜலத்துடன் சாப்பிட நல்லது. பித்த கிரஹணி, ரத்தமூலம், ரத்தாதிஸாரம், ஹிருதயவலி, குதத்தில் வலி, பிரவாஹிகை இவை நீங்கும்.

**பூநிம்பாதி சூர்ணம்.** நிலவேம்பு, கடுகுரோகிணி, சுக்கு, திப்பிலி, மிளகு, கோரைக்கிழங்கு, வெட்பாலையரிசி வகைக்கு ஒரு தோலா, சித்ரமூலப்பட்டை 2 தோலா, வெட்பாலைப்பட்டை 16 தோலா, இவைகளைச் சூர்ணித்து வெல்லம் கரைத்த குளிர்ந்த ஜலத்துடன் சாப்பிட கிருஹணி, பித்ததோஷம் காமலை, ஜ்வரம், பாண்டு, மோஹம், அதிஸாரம் இவை நீங்கும்.



**கபக்கிரஹணியில்:** பூலாங்கிழங்கு, சுக்கு திப்பிலி, மிளகு, கடுக்காய், யவக்ஷாரம், ஸர்ஜக்ஷாரம், கண்டந்திப்பிலி, மாதுளம் விதை இவைகளைச் சூர்ணம் செய்து எலுமிச்சம்பழச்சாறு அல்லது காடியுடன் இந்துப்பு சேர்த்துக் கலந்த அனுபானத்துடன் சாப்பிடலாம்.

**ரஸோனாதி சூர்ணம்.** சித்தரத்தை, கடுக்காய், பூலாங்கிழங்கு, சுக்கு திப்பிலி, மிளகு, யவக்ஷாரம், ஸர்ஜக்ஷாரம், ஐந்து உப்புகள், கண்டதிப்பிலி இவைகளைச் சூர்ணித்து மாதுளம்பழச்சாறுவிட்டுப் பிசிறி உலர்த்தி, வென்னீருடன் சாப்பிடலாம்.

## கிரஹணியில் பொதுவான சிகித்ஸை.

**சுண்ட்யாதி கஷாயம்.** சுக்கு, கோரைக்கிழங்கு, அதிவிடயம், சீந்திற்கொடி - இவைகளை சம அளவு சேர்த்துக் கஷாயமிட்டுச் சாப்பிட அக்னிமந்தம், ஆமவாதம், ஆம கிரஹணி நீங்கும்.

**சித்ரகாதிவடி.** கொடிவேலிவேர் பட்டை, கண்டந்திப்பிலி, யவக்ஷாரம், ஸர்ஜக்ஷாரம், ஐந்து உப்புகள், சுக்கு, திப்பிலி, மிளகு, பெருங்காயம், ஓமம், சவ்வியம் இவை வகைக்குச் சமஎடை, இவைகளைத்தூள் செய்து மாதுளம்பழச் சாற்றில் அல்லது துரிஞ்சிச் சாற்றில் அரைத்து மாத்திரை செய்து கொள்ளவும். ஆமம் ஜீர்ணமாகும். பசி உண்டாகும்.

**சவ்யாதி சூர்ணம்:** சவ்வியம், கொடிவேலிவேர் பட்டை, வில்வப்பிஞ்சு, சுக்கு இவைகளின் சூர்ணம் மோருடன் கலந்து சாப்பிட கடுமையான கிரஹணியின் வேதனை குறையும்.

**பல்லாதகக்ஷாரம்.** சுத்திசெய்த சேங்கொட்டை, சுக்கு, திப்பிலி, மிளகு, கடுக்காய் தோல், தானிக்காய் தோல், நெல்லி முள்ளி, இந்துப்பு, கந்தகவெடியுப்பு, கடலுப்பு இவை வகைக்கு 8 தோலா எடுத்துச் சட்டியினுள் வைத்து மூடிச் சீலைசெய்து புகை வெளியேறாமல் வராட்டி நெருப்பில் எரித்தெடுத்து அந்த க்ஷாரத்தை நெய்யுடன் சாப்பிட, அல்லது சாதத்துடன் கலந்து சாப்பிட ஹிருதயரோகம், பாண்டு, கிரஹணி, குல்மம், உதாவர்தம், சூலம் இவைகளில் நல்ல பலனைத் தரும்.

**மோர் உபயோகித்தல்.** ஒரு வாரம் அல்லது 10 நாள் அல்லது 15 நாள் அல்லது ஒருமாதம் வரை வியாதி சரீரம் இவைகளின் பலத்தையும் காலத்தையும் அனுசரித்து மோர்மாத்திரம் சேர்ந்த உணவைச் சாப்பிடுவதும் தனிமோரைச் சாப்பிடுவதும்

நல்லது. அம்ருதம் போன்று மோர் நல்ல பலன் தரும். உரக்ஷதமிருக்கும் போதும் உஷ்ணகாலத்திலும் துர்பலனுக்கும் மூர்ச்சை தலைசுற்றல் எரிச்சல் ரத்தபித்தம் இவை இருக்கும்போதும் மோர் சேர்க்கக்கூடாது. கிரஹணியால் கஷ்டப்படுபவனுக்கு மோர், லகுவாக இருப்பதால் தீபனமாயும் மலத்தைக் கட்டுவதாயுமிருக்கும். விபாகத்தில் இனிப்பாகுவதால் வியாதியில் சிறந்த பத்ய உணவாகின்றது. பித்தத்தைக் கெடுப்பதில்லை. துவர்ப்பும் சூடும் சீக்ரமாகப் பரவும் தன்மையும் வரட்சியும் உள்ளதால் கபத்தை அதிகப்படுத்தாது. சாந்தப்படுத்தும். இனிப்பும் புளிப்பும் குழகுழப்பு முள்ளதால் வாயுவைக் கண்டிக்கும். அத்துடன் புதிதாகக் கடைந்தெடுத்த மோர் விதாஹியுமல்ல.

மோரை அருசி ஏற்படும்போது மாதுளம் கேஸரத்துடன் நெய் இந்துப்பு சேர்த்தும் கொடுக்கலாம். காலை உணவு நேரத்தில் மோர் கொடுத்தல் நல்லது. கொடிவேலிவேர்பட்டை, ஓமம், இந்துப்பு, சுக்கு மிளகு இவைகளின் சூர்ணத்தைப் புளித்த மோருடன் சாப்பிட ஒருவாரத்தில் அக்னிமந்தம் கிரஹணீ அதிஸாரம் சூலம இவை குறையும்

**தக்ரஹரீதகீ** மோர் 6¼படி எடுத்து அதில் 32 தோலா இந்துப்பு சேர்த்து 60 விதை நீக்கிய கடுக்காயும், சுக்கும். கொடிவேலிவேர் பட்டையும வகைக்கு 16 தோலாவும். ஓமம், ஜீரகம் மிளகு திப்பிலி இவை வகைக்கு 4 தோலாவும் தூள் செய்து நெய் நல்லெண்ணெய் வகைக்கு 16 தோலா சேர்த்துப் பிசிறிக் காய்ச்சி, பதம் வந்ததும் எடுத்துச் சாப்பிட, அக்னி பலம் பெருகும். கிரஹணி நோய் நீங்கும்.

**கல்யாணகாவலேஹம்.** வட்டத்திருப்பி. கொத்துமல்லி விதை ஓமம், ஜீரகம், கொட்டைக்கரந்தை, சவ்வியம், சித்ரமூலப் பட்டை, இந்துப்பு, யானைத்திப்பிலி, கருஞ்சீரகம், வாய்விளங்கம், கண்டதிப்பிலி, ஜடாமாஞ்சி, சுக்கு. திப்பிலி, மிளகு, கடுக்காய் தோல், தானிக்காய் தோல், நெல்லிமுள்ளி, ஏலரிசி, லவங்கப் பட்டை, லவங்கபத்திரி, இவை வகைக்கு ஒரு தோலா வீதமும், செவதைவேர் பட்டை 4 தோலாவும் சேர்த்து இடித்துத் தூள் செய்து கொள்ளவும். நெல்லிக்காய்ச் சாறு 2½ படி எடுத்து அதில் வெல்லம் 200 தோலா சேர்த்துப்பாகு செய்து நல்லெண்ணெய் 16 தோலா போட்டு முன் தயாரித்த சூர்ணத்தையும் சேர்த்து லேகியம் தயாரிக்கவும். இந்த லேகியத்தைச் சாப்பாட்டிற்கு முன் சாப்பிட கிரஹணீ, மூலம்



சோஷம், ச்வாஸம், வீக்கம், தொண்டை நோய், வயிற்று நோய், இவைகளைப் போக்கும்

**பில்வாதியோகம்,** வில்வப்பிஞ்சு, கோரைக்கிழங்கு, வெட்பாலையரிசி, வெட்டிவேர், இலவம் பிசின், இவைகளைக் கிழிகட்டிப் போட்டுக் காய்ச்சிய ஆட்டின்பால் மூன்று நாட்கள் தொடர்ந்து சாப்பிட, நாட்பட்ட கிரஹணி மாம்ஸம் ரத்தத்துடன் வெளியாவதாயிருந்தாலும் அதைக் குணப்படுத்தும்.

**வ்யோஷாதி சூர்ணம்.** சுக்கு, திப்பிலி, மிளகு, ஓமம், குரோசாணி ஓமம், வாய்விளங்கம், கொடிவேலிவேர்பட்டை, பெருங்காயம், அமுக்கிராக்கிழங்கு, இந்துப்பு, ஜீரகம், கருஞ்சீரகம், வெடியுப்பு, கொத்துமல்லி விதை அதிவிடயம். கிராம்பு இவை வகைக்குச் சமஎடை சூர்ணம் செய்து தேன் நெய் சேர்த்துச் சாப்பிட உடலுக்கு புஷ்டி, காந்தி, பலம் கிட்டும். கிரஹணி நீங்கும்.

**விருத்தகங்காதர சூர்ணம்.** கோரைக்கிழங்கு, வெட்டிவேர், லோத்திரப்பட்டை, வெட்பாலையரிசி, வட்டத்திருப்பி, சுக்கு, பெருவாகை. வில்வப்பிஞ்சு, காட்டகத்திப்பூ, தொட்டாச்சுருங்கி, இலவம்பிசின், மாம்பருப்பு, வெட்பாலைப்பட்டை, அதிவிடயம் இவைகளின் சூர்ணத்தைத் தேனில் குழப்பி அரிசி கழுவிய ஜலத்துடன் சாப்பிட கடுமையான பிரவாஹிகை, கிரஹணி, அதிஸாரம் நிற்கும்.

**மஹாதாளீஸாதி சூர்ணம்.** தாளீஸபத்ரி, வசம்பு மூங்கிலுப்பு, திப்பிலி, கண்டதிப்பிலி, சவ்வியம், கொடிவேலிவேர்பட்டை, சுக்கு, மிளகு, மஞ்சள், வில்வப்பிஞ்சு, ஓமம், பூலாங்கிழங்கு, ஏலரிசி, லவங்கப்பட்டை, லவங்கபத்திரி, சிறுநாகப்பூ, கிராம்பு, காட்டகத்திப்பூ, அதிவிடயம், ஜாதிக்காய், குரோசாணிஓமம், வட்டத்திருப்பி, இலவம் பிசின், மாம்பருப்பு, ஐந்து உப்புகள், ஜீரகம், கருஞ்சீரகம், வாய்விளங்கம், புளிவஞ்சி, புளி, புரசிலை, ஜடாமாஞ்சி, கோரைக்கிழங்கு, வெட்டிவேர், தும்மட்டிவேர், பிராம்மி, கீழாநெல்லி, கோஷ்டம் இவை வகைக்கு ஒரு தோலா, சித்தாமுட்டிவேர் 43 தோலா, கஞ்சா 86 தோலா, சர்க்கரை 172 தோலா. இந்த சூர்ணம் கிரஹணி க்ஷயம், இருமல், ச்வாஸம், அரோசகம், ப்லீஹா, ஹிருதயரோகம், அபஸ்மாரம், பாண்டு, குல்மம், உதரம், கபபித்த உன்மாதம், இவைகளைப் போக்க வல்லது. குழந்தைகளுக்கு விசேஷமாக நல்லது. ஸ்பஷ்டமான குரல், புஷ்டி, பலம், காந்தி மேதை, ஞாபகசக்தி, புத்தி இவைகளை அளிக்கவல்லது.

**ஜாதீபலாதி சூர்ணம்.** கிராம்பு, ஏலரிசி, ஜாதிக்காய், லவங்கபத்திரி, லவங்கப்பட்டை, சிறுநாகப்பூ, சூடம், சந்தனத் தூள், எள்ளு, மூங்கிலுப்பு, தகரவிதை, நெல்லிமுள்ளி, தாளீஸ பத்திரி, திப்பிலி, கடுக்காய்தோல் பெருஞ்சீரகம், கொடிவேலி வேர்பட்டை, சுக்கு, வாய்விளங்கம், மிளகு இவை வகைக்கு ஒரு தோலா தூள் செய்து கஞ்சா 20 தோலா, சர்க்கரை 40 தோலா சேர்க்கவும். தேனில் சாப்பிட கிரஹணி, ச்வாஸம், காஸம், அருசி, க்ஷயம், பீநஸம் இவை போகும்.

**பில்வாதி கிருதம்.** வில்வப்பழச்சதை அல்லது பிஞ்சு, கொடிவேலிவேர்பட்டை, இஞ்சி, சுக்கு, இவை கல்கம்; நெய், நெய்க்குச் சமஅளவு ஆட்டுப்பால் இவைகளைக் கொண்டு தயாரித்த நெய் வீக்கம், அக்னிமந்தம், அரோசகம் இவைகளைப் போக்கவல்லது.

கஷ்டப்பட்டுக் கெட்டியாக மலம் வெளியாகும்போது நெய்யை உப்பு சேர்த்துக் கொடுக்கவும். ஓமத்தையும் வெடியுப்பையும் வயிறு உப்புசம் இருக்கும் போது வென்னீரில் போட்டுக் கொடுக்கவும்.

**திராக்ஷாஸவம்.** திராக்ஷை 400 தோலா, 25படி ஜலத்தில் கால்பங்கு மீதமாகக் காய்ச்சி வடிகட்டி. தேன் 400 தோலா, கல்கண்டு 400 தோலா, காட்டகத்திப்பூ 64 தோலா, வால்மிளகு, கிராம்பு, ஜாதிக்காய், மிளகு, லவங்கப்பட்டை, ஏலரிசி, லவங்க பத்திரி, சிறுநாகப்பூ, திப்பிலி, கொடிவேலிவேர்பட்டை, சவ்வியம், கண்டந்திப்பிலி, அரேணுகம் இவைகளின் சூர்ணம் வகைக்கு 4 தோலா. ஆஸவ முறைப்படி ஸந்தானம் செய்து எடுத்து பச்சைக்கர்ப்பூரம வாஸனைக்காக சேர்த்துக்கொள்ளவும். மூலம். மலபந்தம், உதரம் கிருமி, குஷ்டம், விரணம், கண்ணோய், தலைவலி தொண்டைநோய், ஜ்வரம், அஜீரணம், பாண்டு, காமலை இவைகளைப்போக்கும். பலம் புஷ்டியளிக்கும்.

✻ **கபித்தாதிபேயா.** (பை. ர.) விளாம்பழச்சதை, வில்வப்பழச் சதை, புளியாரைக்கீரை, மாதுளம்பழஓடு அல்லது விதை இவை வகைக்கு சம எடை சேர்த்து 4 தோலா, மோர் 28 தோலா, அரிசி 1 தோலா, 28 தோலா ஜலம்; மோர் அளவு மீதமாகும் வரை சுண்டவைத்த கஞ்சி இந்துப்பு சேர்த்து சாப்பிட நல்லது. வாயு மிகுந்திருந்தால் லகுபஞ்ச மூல கஷாயம் இதில் சேர்த்துக் கொள்ளவும்.

✻ **தான்ய[illegible].** (பை. ர.) கொத்துமல்லிவிதை, அதிவிடயம், [illegible] இலாமிச்சை, [illegible] கிழங்கு, சுக்கு, சித்தாமுட்டிவேர்,

1 [illegible]

வாரியர்

# க்ஷீரபலா-101

ஸர்வாங்க வாதம், பாரிசவாயு முதலிய எல்லாவிதமான வாத நோய்களையும் குணப்படுத்தக்கூடிய மிகச் சிறந்த மருந்து. வாயுவினால் ஏற்படக்கூடிய மூச்சுப்பிடிப்பு, மார்பு வலி, விலாப்புறங்கள் வலி, முதுகு வலி, சந்துக்கள்—தசை நார்களில் வலி, வீக்கம், கை, கால் வலி முதலிய எல்லா விதமான நோவுகளையும் நிச்சயமாக குணப்படுத்தும். மற்றும் நரம்புகள் சம்பந்தப்பட்ட விரல் நடுக்கம், நாக்குக் குளறல் கண்—காது கோளாறுகள், ஒருத்தலை வலி, முதலிய கோளாறுகளையும் குணப்படுத்தும்.

ரத்த அழுத்தம் (பிளட் பிரஷர்) என்ற வியாதியை குணப்படுத்தவும், வராமல் தடுக்கவும் நிகரற்றது.

ஊமையடிகளுக்கு இதைவிட சிறந்த மருந்து கிடையாது.

பிரஸவித்திருக்கும் பெண்களுக்கு வாயுவை சீராக்கி உடம்பை தேற்றும்.

வயோதிகர்கள் இதை தினசரி உபயோகித்து வந்தால் வாத ரோகங்களும், விருத்தாப்பியத்தினால் ஏற்படும் நரம்புத் தளர்ச்சியும், புலன்களின் சக்தி குறைவும் ஏற்படாமல் ஆரோக்கியத்துடன் இருக்கலாம்.

விலை: 1 அவுன்ஸ் ரூ. 5-8-0 1/2 அவுன்ஸ் ரூ. 2-14-0.

ஆரிய வைத்தியர் கெ. எஸ். வாரியர் அவர்களின்

அஷ்டாங்க ஆயுர்வேத சாலா,

சைனா பஜார், தெப்பக்குளம் போஸ்ட், திருச்சி.

(1936-ல் நிறுவப்பட்டது.)

## மூலிகை நாட்டு மருந்துச் சரக்குகள் சாஸ்திரீயமான ஆயுர்வேத மருந்துகள் இவைகளுக்கு நம்பிக்கையான இடம்

## K. L. TALWAR & BROS.

**MUSK MERCHANTS.**

**P. B. No. 17, LUDHIANA.**

விலைப் பட்டியல் கேட்லாக்குகளுக்கு எழுதினால் இனாமாக அனுப்பப் பெறும்.

## திருச்சி ஆயுர்வேதிக் யூனியன் லிமிடெட்.,

**17, சின்னக்கடைத் தெரு,**

தெப்பக்குளம் P. O. திருச்சிராப்பள்ளி.

★

## வைத்தியர்களுக்கு

எல்லா சாஸ்திரீய மருந்துகளும் மிகக் குறைந்த விலைக்கு சப்ளை செய்யப்படும்.

விபரங்களுக்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்.

## தி இண்டியன் மெடிகல் பிராக்டிஷனர்ஸ் கோவாபரேடிவ் பார்மஸி அண்டு ஸ்டோர்ஸ் லிமிடெட் X 185

*லேடிஸ் பிரிட்ஜ்ரோட், அடையாறு, மதராஸ் 20.*

தபால் பெட்டி நெ. 907. போன் நெ. 71628.

**ப்ரஸிடெண்ட் :— வைத்யரத்ன, கேப்டன் G. ஸ்ரீனிவாஸமூர்த்தி, பி. ஏ., பி. எல்., எம். பி. ஸி. எம்.**

**வைஸ்பிரஸிடெண்ட் :— டாக்டர் Y. சூர்யநாராயண ராவ், எல். ஐ. எம்.**

அங்கீகரிக்கப்பட்ட பங்குத் தொகை :— ரூ. 100,000
(பங்கு ஒன்றுக்கு ரூ. 5 வீதம் 20 000 பங்குகள் கொண்டது)

| | | |
|---|---|---|
| வசூலிக்கப்பட்ட பங்குத் தொகை | ... ரூ. | 65,395 |
| சங்கத்தின் க்ஷேம நிதி | ... ரூ. | 1,89,586 |
| சங்கத்தின் இதர நிதிகள் | ... ரூ. | 2,22,105 |

1. இந்திய யூனியன் முழுவதிலுமுள்ள தேசீய இந்திய வைத்தியர்களும், இதர விதமான பட்டம் பெற்ற தேசீய வைத்தியர்களும் இந்த சங்கத்தில் மெம்பராகச் சேரலாம்.

பங்கு ஒன்றுக்கு ரூ. 5–00. பிரவேச கட்டணம் 25 நயாபைசாக்கள்)

2. ஆயுர்வேத, சித்த, யூனானி தேசீய மருந்துகள், சாஸ்த்ரீய முறைப்படியும், தக்க மேற்பார்வையுடனும் தயார் செய்து, தேசீய மருந்துகளைக் கையாளும் வைத்தியர்களுக்கு சப்ளை செய்யும் சிறந்த கூட்டுறவு சங்கம்.

### — எமது வெளியீடுகள். —

1. **வைத்ய யோகரத்னாவளி** ஆங்கில பிரதி ரூ. 6—00
   ,, தெலுங்கு பிரதி ரூ. 6—50
2. **சித்தபார்மகோபியா** ஆங்கிலத்தில் பிரசுரிக்கப்பட்டது விலை ரூ. 3—00
3. **யூனானி பார்மகோபியா** ஆங்கிலத்தில் பிரசுரிக்கப்பட்டது விலை ரூ. 3—00

(தபால் கட்டணம், விற்பனை வரி பிரத்தியேகம்.)

**கிளை அலுவலகங்கள் :—**

(1) 20/320, பொட்டி பொட்டலவாரி தெரு, கவர்னர் பேட்டை, விஜயவாடா–2. (ஆந்திர ராஜ்யம்.)

(2) 88, ஆற்காடு சீனிவாச ஆச்சாரி தெரு, பெங்களூர்–2. (மைசூர் ராஜ்யம்.)

(3) கோவாபரேடிவ் அர்பன் பாங்கு கட்டிடம், கல்லை ரோடு, கோழிக்கோடு–2. (கேரள ராஜ்யம்.)

(4) நகர விற்பனை டிப்போ, 4/186, மவுண்ட் ரோடு, மதராஸ்–2. டெலிபோன் நெ. 86520.

வைத்ய வாசஸ்பதி

## பண்டிட் P. S. ராமசர்மா அவர்களின்

நீண்ட கால பரிசை அனுபவங்களினால் கண்டுபிடிக்கப்பட்ட
கைகண்ட பலனளிக்கும்

# "சக்தி ஸஞ்ஜீவி"

(Regd.)

குழந்தைகளுடைய ஈரல் குலைக் கட்டிகளை எந்நிலையிலும்
போக்குவதிலும், வராமல் தடுப்பதிலும் நிகரற்ற ஔஷதம்
எங்கும் கிடைக்கும்.

❋

*தயாரிப்பவர் :—*

**சக்தி விலாஸ வைத்தியசாலா,**
**கரூர். (S. Ry.)**

Printed at the Srivilasam Press, Srirangam and Published by
S. V. Radhakrishna Sastri for Tamilnad Ayurveda Maha Mandalam,
Bharat Ayurveda Sala, 27 Chinnakadai Street, Teppakulam, Tiruchy.
Editor: S. M. Sundararajacharyar, Srirangam.